M.M.M. NOORUL HAGU
EDITOR OF AL HUTHA
129, OSMAN ROAD
SAINTHUMARARUTHU - 1

0600

# சரித்திரம் சாகும் நாள்

'HATHIBUL'HUTHA'
M.M.M. NOORULHAGU J.P
DIPLOMA IN MASS MEDIA
FREELANCE JOURNALIST & WRITER
129B, OSMAN ROAD,
SAINTHAMARUTHU - 05

B. NO.
736



சதுரையூர் சுலைமா

<u>வாழ்த்துரை</u>

"சரித்திரம் சாரும் நாள்" எனும் கதையை நான் வாசித்தபோது என்னை மீறிய ஓர் ஆச்சரிய உணர்வுக்குள்ளானேன். இதன் ஆசிரியர் சதுறையூர் சரலியாவை நேரடியாகத் தெரிந்து வைத்துள்ளோர் என்னைப் போலவே ஆச்சரியத்துக்குள்ளாக நேரிடும். இந்த இளைஞன் தன்னுள் இத்தனை இலக்கிய சாதனை வெறியை அடக்கி வைத்திருப்பதனை உணர்தல் ஓர் ஆச்சரியமான அநுபவமே.

"ஞான ஒளி" எனும் சஞ்சிகையின் ஆசிரியரான இவரின் இயற்பெயர் நௌபர் அலி. இன்று இவர் படைத்துள்ள சரித்திரம் சாரும் நாள் எதிர்காலத்தில் ஓர் சிறந்த படைப்பாளியின் உதயத்துக்கான பூபாள ஒலி எனின் மிகையாகாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல படைப்புக்களின் வாசிப்பும் பரிச்சயமும் காத்திரமான படைப்பாளர்களின் சகவாசமும் சிறந்த வாசகர்களினதும் விமர்சகர்களினதும் நெறிப்படுத்தலும் இவருக்குக் கிடைத்தால் நாடு போற்றும் ஓர் நல்ல எழுத்தாளனாக இவர் பரிணமம் பெறுவது திண்ணம்.

இவரின் இலக்கிய வேட்கைக்கும் கடின உழைப்பிற்கும் எனது நல் வாழ்த்துக்கள் என்றும் உரியன.

அன்புடன்.

1989-10-05

மன்சூர் ஏ. காதர்.

## நல்வுரை

நமக்கெல்லாம் இறைவன் துணை புரியட்டும்.

"சரித்திரம் சாரும் நாள்" எனும் கதையை படித்தேன். ரசித்தேன். பணிவுடன் சில வார்த்தைகள் கேட்கிறார். மகிழ்வுடன் தருகிறேன்.

நாளைய கலைத் தோட்டத்தின் இள மொட்டொன்றை தரிசித்த மன நிறைவை சரலியாவை சந்தித்ததில் பெறுகின்றேன். இவர் தனது சின்னக்கருவுக்குள் பலதையும் சொல்லத் துடிக்கிறார்.

வாழ்வின் வேதனையும், சோதனையும், வெற்றியும் அவர் கதைக்குள் பட்டுத் தெறிக்கிறது. இடையிடையே ஆழமான நாசூக்கான சிந்தனை வெளிப்பாடும் தெரிகின்றது. இறுதியில் இன்று எம் சமூகத்தில் உயர் அதிகாரிகளுக்கு நடக்கும் யதார்த்த வெளிப்பாட்டையும் அவர் காட்டத் தவறவில்லை.

எப்படியோ இந்த மொட்டு (சரலியா) விரிந்து நல் மணம் பரப்ப வேண்டும். இந்த காலத்தின் அநாகரிக கோலங்களுக்குள் சிக்கிக் கொள்ளாது ஓர் இளவல் இலக்கியப் பாதையில் நடை பயில வந்திருப்பது குறித்து நாமெல்லாம் மனம் மகிழ வேண்டும். இன்னும் அவர் எழுத----- அதில் வளர----- நான் நல்வுரை வழங்குகின்றேன். அதனோடு நாமெல்லாம் இனியன சொல்லி அவர் எதிர்கால வளமான இலக்கிய வழிக்கு நல்ல பாதை காட்டிடவும் வேண்டும்.

நன்றி

1989-10-05

றமீஸ் அப்துல்லா

## எண்ணம்

மனித குல வரலாற்றிலே புதிய புகல் உதயமாகும் காலம் இது புதியவைகள் தழைத்தோங்க வேண்டும் என்ற ஆர்வம் பொங்கும் காலமும் இது!

மனிதனை நல்லவன் -கெட்டவன் என்று வகுப்பது உள்ளங்கள்தான் இந்த உள்ளங்கள் நல்லவனை கெட்டவருக்கும் என்பதில் ஐயமுமில்லை

ஏனெனில் இந் நாவலைப் புரட்டிப் படித்தால் புரியும். இக் கதையின் கதாநாயகன் சப்ரியை எவ்வளவோ வேர் கெட்டவனாகக் கருதினர். ஆனல் மக்களின் முன்னல் கெட்ட ரூபம் காட்டினலும் அந்த அரச அதிபர் சப்ரியின் உள்ளம் தூய்மையானதாகவே இருந்தது.

நல்வாழ்வுக்கு உடல் ஆராக்கியம் மட்டும் தான் போதுமானதல்ல மன ஆரோக்கியமும் அவசியம். அதற்கு உயர்ந்த கட்டுப்பாடான மனம் தான் தேவை. ஆன்மீக வளர்ச்சிக்கும் அதுதான் தேவை.

மனிதனின் மனதைச் சீர்படுத்த, உயர்த்த, பக்குவப்படுத்தவே இந் நாவலை எழுதுகின்றேன்.

சம்மாந்துறை -04
1989-10-03

அ. னௌபர் அலி

(சதுறையூர் சரலியா)

ALIYAR NOWFAR ALI
EDITOR OF GAHANA OLI
"SALFIYA MANZIL"
SAMMANTHURAI-04

றிங்.... றிங்.... என்று தொலைபேசி மணி ஒலித்தது... அந்த மாலை நிலவின் இயற்கை ரசனையை ரசித்துக் கொண்டு "உன்னைத்தானு என் மனம் நினைத்தது" என்ற நாவலுடன் மூழ்கியிருந்த சப்ரி எரிச்சலுடன் போனை எடுத்தான்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையை எழுதி விட்டு திறமையானதொரு முடிவை எதிர்பார்ப்பவன் சப்ரி.

உறலோ.....யார் பேசிறது என்று தொலைபேசியின் மறுமுனையில் பேசுபவரிடம் கேட்டான். போனில் தொடர்பு கொள்வது தனது வெளியூர்க் கல்லூரியில் ஒன்றாய்ப் படித்த நண்பன் உறிபத்துல்லாஉற் என்பதை அறிந்தவன் — மச்சான் என்னடா ரிஸல்ட் வந்துட்டாடா என்று கேட்ட சப்ரிக்கு கிடைத்த பதில் — அவனை உலுக்கியது.

சப்ரி தன்னை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு உம்மாயிருக்கும் சமயலறைப் பக்கம் ஓடினான்

உம்மா..... என்ற ரிஸல்ட் வந்திட்டு என்றவனின் கண்ணால் மாலை மாலையாக கண்ணீர் வடிந்தோடியது. அவன் ஒரு கெட்டிக்கார மாணவன் தான் அவன் எதிர்பார்த்த ரிஸல்ட் 3 டீ 3 சீ.

அச் சமயம் அவனைக் குறுக்கிடு செய்த அவனின் தாய் செய்னம்பு "என்ன மகன் என்ன ஒன் ரிஸல்ட் என்றாள்.

உம்மா.... உம்மா என்றவன் ஒருவாறு தன்னை உறுதிப்படுத்திக் கொண்டு சொன்னான். 3 சீ 3 எஸ் என்றவன் தனது சோகத்தால் அழுதான்

அவன் அழுவதில் காரணமும் இல்லாமல் இல்லை.

சப்ரி தனது ஊரில் ஆரம்பக் கல்வியைக் கற்று பின் தனது ஊரில் உள்ள மகா வித்தியாலயத்தில் சேர்ந்தான். அவன் கூடுவாருடன் கூடி அன்று தீய வழியில் செல்ல முனைந்தவனை அந்த ஊரில் படித்த பண்புள்ள ஆசிரியர்களில் ஒருவரான அவனுடைய தந்தை சூழலை மாற்றும் நோக்குடன் வெளியூரில் உள்ள கல்லூரியொன்றில் சேர்த்தார்.

செட்டவனாக இருந்த சப்ரி சூழல் மாறியவுடன் படிப்படியாகத் திருந்தி அந்தக் கல்லூரியில் தனது தாயகத்திற்கும் பெற்றோர்க்கும் பெருமையைத் தேடிக் கொடுத்ததுடன் அவனுக்கும் பெருமையையும் நன் மதிப்பையும் பெற்றுக் கொண்டான். இவன் சிறந்த குரல் வளமிக்க பேச்சாளரும் எழுத்தாளருமாவான். இப்படிப் பட்டவருக்கு இது ஒரு சோதனைக் காலம் தான்.

*

நாட்கள் பல நகர்ந்தன. அவனுடைய நன்பர்கள் எல்லோரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரக் கல்வியினை பயில பாடசாலையில் சேர்ந்து விட்டார்கள். சப்ரியின் பரீட்சை முடிவு ஒரு சிறந்த முடிவாக இல்லா விட்டாலும் உயர்தரக் கல்வி பெற தகுதியான ஒரு முடிவாக இருந்தது.

சப்ரி உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் பண்புடையவனாகையால் ஏதோ ஒருவாறு அந்த சர்வ புகழ் கொண்ட இறைவனுக்கு தனது நன்றியைத் தெரிவிக்கத் தவறவுமில்லை.

இப்போது இவனுக்குக் கல்லூரிக்குப் போக வேண்டும் உயர்தரக் கல்வி பயில வேண்டும் என்ற ஆசை குடி கொண்டாடியது. அச் சமயத்தில் பத்திரிகையின்

வாயிலாக கல்வி நிலையமொன்றில் ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை நடைபெற உள்ளதை அறிந்தவன் தானும் அவ்விடம் செல்ல ஆர்வம் கொண்டான்.

குறித்த திகதிக்கு முன் நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடத்திற்குச் செல்ல அவனுக்குத் தேவையான ஆவணப் பையுடன் அவனது மூத்த சகோதரியின் கணவரையும் அழைத்துக் கொண்டு செல்ல ஆயத்தமானான்.

காலை நேரக் கடும் குளிருடன் தலை நகரை நோக்கி நகரும் பஸ்ஸில் ஏறிக் கொண்டு சென்று தலை நகருக்குப் போய் அங்கிருந்து பஸ் எடுத்து அதற்கண்மையில் உள்ள கல்வி நிலையம் நோக்கிச் செல்லலானான்.

அவன் அன்றைய பொழுதினை பிரயாணத்திற்காகவே செலவு செய்து அன்றிரவு 7 மணியளவில் அவ்விடம் சென்றடைந்தான்.

விடியற் காலையில் நடைபெற உள்ள நேர் முகப் பரீட்சைக்குத் தயாரானபடியே சென்ற இடத்தில் பிரயாணக் களைப்பால் நேரத்திற்கு முந்தியே தூங்கி விட்டான்.

காலையில் நித்திரை விட்டெழுந்தவன் காலைக் கடன்களை முடித்து விட்டு நேர்முகப் பரீட்சைக்குச் சென்றான். நேர்முகப் பரீட்சையில் முதலாவது அழைக்கப்பட்டவன் சப்ரிதான்.

நேர்முகப் பரீட்சை முடிவடைந்தவுடன் சப்ரி பூரண நம்பிக்கையுடன் முடிவை எதிர் பார்த்தவனாக உள்ளூர் நோக்கிப் பிரயாணமாகி வீடு வந்தடைந்தான்.

*

நாட்கள் உருண்டோடின. வாரம் ஒன்றானது. வாரப் பத்திரிகையை மிக ஆவலுடன் புரட்டியவனுக்குச் சோதனைக் காலம் தான். அவன் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகவில்லை.

அப்போது அவன் மனம் சோக தீபமேற்றியது.

"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி" என்ற தீச் சொற்கள் அடங்கிய வார்த்தைகள் அவனுடைய வாயினால் அவனையறியாமலேயே ஒலித்தன.

அவனுடைய நண்பர்களும் சகோதரிகளும் அவனைத் தேற்றினார்கள்.

இதிலும் தோல்வி கண்டவன் இனி எங்காவது சென்று கல்வி கற்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் தன் தாயின் அநுமதியைப் பெற்றவனாக டியூசன் வகுப்புக்குச் செல்வான். வருவான். குறிப்புக்களைப் படிப்பான். தனது துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு சுற்றித் திரிவான். இவ்வாறே அவனுடைய அன்றாட வாழ்வு கழிந்தது.

சப்ரியின் உள்ளமே இச் செயலைக் கண்டித்தது. சப்ரியை உருட்டியது. இப்படித் திரிந்தா என்னடா முடிவு என்று தோன்றியது..

சப்ரி கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பில் படிக்கும் போதே ஒரு சஞ்சிகையின் ஆசிரியனாக இருந்தான். பின் அதனைக் கைவிட்டு விட்டான்.

ஆனால் மீண்டும் அதனை ஆரம்பிப்பது என முடிவெடுத்தான். தனது ஊரை சார்ந்துள்ள ஊரில் ஒரு முதிய எழுத்தாளன் ஒருவரை சந்திக்க அவாக் கொண்டான். இப்போது இவன் மனம் நான் ஒரு சரித்திர மனிதனாகத் திகழனும் என்று எண்ணியது. எனவே அதன்படி அவன் செயற்பட்டும் வந்தான்.

திங்கட்கிழமை அன்று காலையில் மூத்த எழுத்தாளர் அலி உஸ்மான் அவர்களை சந்திக்க தனது துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு சுமார் 5 மைல் தொலைவில் உள்ள அவரின் நகருக்குச் சென்று அவர் ஆசிரியராகக் கடமை புரியும் கல்லூரிக்குப் போய் அவரைச் சந்தித்தான்.

சேர் எனது பெயர் சப்ரி எனது ஊர் சதுறை நான் சமூகமே என்ற சஞ்சிகையின் ஆசிரியன். என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டே "எனக்குத் தங்களிடம் இருந்து ஓர் உதவி தேவை" என்றான்.

என்னப்பா உதவி சொல்லு என்றார். எழுத்தாளன் உஸ்மான்.

நீங்க ஏதாவது ஓர் ஆக்கம் என் சஞ்சிகைக்காக தரவேண்டும் சேர் என்றான் சப்ரி.

தம்பி உங்களைப் போல புள்ளையல் சமூகத்திலே இல்ல..... இருந்தா சமூகமே இப்படி இருக்க மாட்டா.... என்றவர் தனது டயரியைப் புரட்டி இது நல்ல கவிதையா? என்று கேட்டவர் கவி படிக்கலானார்.

புத்தி பலமான
இந்த இளைஞனின்
இளைய தளிர் எப்போ முற்றுமோ
இல்லை
இவனின்
இளைய தளிர் முற்றி விட்டது....

என்று கவிதையை படித்துக் கொண்டே தொடரலானார். இவரின் கவிதையைக் கேட்டு அவன் அதிர்ந்தே விட்டான்.

அப்போதுதான் இவர் மூத்த எழுத்தாளர் மட்டுமல்ல மூத்த நாவலரும் என்பதை உணர்ந்தான். அதன் பின் அக் கவிதையை ஒரு வாரத்திற்குள் தபாலிலிடுவதாக உறுதியளித்தார்.

பிறகு என்னைப் பற்றி விசாரித்தார். தம்பி என்ன படிக்கிறாய்.... என்றவரிடம் என்ன பதில் கூறுவது என்று யோசித்தான். பின் சேர் ! ஓ/எல். படித்து பாஸ் பண்ணி விட்டு ஒன்றும் படிக்காம வீட்டிலேன் இருக்கன் என்று பதிலளித்தான்.. அவர் அவனது கவலையை பதிலின் மூலமே உணர்ந்தார்.

தம்பி இந்த ஸ்கூல்ல வந்து சேரலாமே.... என்றார். அதன் பின் அவன் அவரிடம் விடை பெற்று ஊருக்கு புறப்பட்டு சைக்கிள் மிதிக்கலானான்.

*

படிப்பு, படிப்பு என்று அலைந்த சப்ரிக்கு எப்படியாவது அலி உஸ்மான் சேர்ர ஸ்கூல்ல போய் சேரனும் என்ற ஆசை பொங்கியது.

தனது பெற்றோரிடம் வந்து இதனைக் கூறி ஒருவாறு அவர்களின் விருப்பமின்றி விரும்ப வைத்து விட்டான்.

சப்ரி அடுத்த நாள் அலி உஸ்மான் சேர்ர ஸ்கூலுக்குப் போனான்.

ஸ்கூல் பிரின்சிபல சந்தித்த போது அவர் டொனேசன் ஐயாயிரம் தரணும் என்று வாய் கூசாமல் கேட்டு விட்டார்.

அதனைக் கேட்ட சப்ரி சேர் இந்த ஐயாயிரம் ரூபாவை ஸ்கூல்ல தந்து சேர்ரத்த யாரிட காலில விழுந்தாவது இதோட இன்னும் பத்தாயிரத்தை சேர்த்துக் கொடுத்து ஒரு தொழில் பார்க்கலாம் தானே என்றான்

அப் போ அதிபர் சரி நீங்க அப்படியே செய்யுங்கள் என்று கூறி விட்டார்.

தோல்வி மேல் தோல்வியாக வரும் போது இறைவா என் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் செயலில வெற்றியையும் தா என்று பலவாறும் பிரார்த்திப்பான்.

பிரார்த்தனையால் மட்டும் பிரயத்சம் விழிக்காது என்பதற்கொப்ப பலன் கிடைக்கவில்லை. அது சோதனையோ அல்லது வேதனையோ தெரியாது?

சப்ரியின் வேதனையான ஒவ்வொரு மூச்சிலும் சமூகத்திற்கு சேவை செய்யணும் என்ற ஆர்வம் எழுந்தது.

அவனின் முதல் சேவையாக இஸ்லாமிய அறிவை வளர உதவுவதே முக்கிய கருவாக விளங்கியது.

சப்ரி 17 வயது நிரம்பிய ஓர் இளைஞன். இளமையின் இங்கிதத்துடனே இனியவைகள் செய்து வந்தான்.

கலவரங்கள் நடந்தால் அவ்விடம் செல்வான். சட்டத்தை நிலை நிறுத்த சட்டத்தின் காவலாளிகளிடமும் போராடியுள்ளான்.

ஆனால் சப்ரி எவ்வளவுதான் சமூகம் என்று சிந்தித்தாலும் இந்த சமூகமோ இவன் ஒரு மனிதன் என்று கூட நினைப்பதில்லை. இவனைப் பார்ப்பதே கேவலம் என்ற அளவுக்கு ஒதுக்கவும் முயற்சித்தார்கள்.

சத்தியம் வெல்லும் அசத்தியம் தோல்வியடையும் என்பதன்டிப் படையில் சமூகம் ஒதுக்கினால் சமூகத்தை அவன் ஒதுக்கவுமில்லை, ஒதுங்கவுமில்லை. அந்த ஒரு சமூகத்திற்காக இந்த ஓர் உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராகவே இருந்தான்.

சப்ரி யாருடனும் சரி பல்லு வெளியில் தெரியாமல் உதட்டை மடித்துச்சிரிக்கும் (புன் சிரிப்பு) பழக்கம் கொண்டவன். இவனிடம் ஒரு சிறந்த பண்பு இருந்தது. தன்னை எவர் ஒதுக்குகிறார்களோ அவர்களை மீண்டும் மீண்டும் நட்புக் கொண்டாடும் உள்ளம் கொண்டவன். சப்ரி கவலையுடன் அவன் பாதையில் செல்லும் போதும் கூட யாரைக் கண்டாலும் ஒரு புன் சிரிப்பை நிகழ்த்தாமல் விடவும் மாட்டான்.

இப்படியான சப்ரியை சில தாய்க்குலம் தப்புக் கணக்குப் போட்டும் உள்ளனர். அதற்குக் காரணம் அவனுள்ளம் புரியாமையே.

சப்ரி கல்லூரித் தோழிகளுடனும் சோஷியலாக உள்ளதை உள்ளபடி பழகும் நேர்மை உள்ளம் கொண்டவன். இதனாலும் குறை காண முயற்சிப்பவர்களின் பார்வையில் சிக்குகிறான். இவனின் நடத்தையால் அவனின் தந்தையிடமும் நல்ல பெயர் வாங்க மாட்டான்.

ஆம் பொது நலம் விரும்பிகள் இவ்வுலகில் நல்ல பெயர் வாங்குவதில்லையே.

காலம் வினைக்குடைந்து விரைவான வளர்ச்சியைத் தழுவிச் சென்று விட்டது. பொருச் சேவை என்றிருந்தவன் இஸ்லாமிய அறிவுடன் உலக அறிவையும் பெற்றான்.

சோதனை எந்நாளுமில்லையே. இறைவன் நாடி விட்டால் ஏது கவலை. புதிய நம்பிக்கை கீற்றுக்களுடன் திகழ்ந்த சப்ரி இன்று ஒரு இஸ்லாமியப் பட்டதாரியும், பல்கலைக் கழக கலைப் பட்டதாரியுமானான். அவன் இன்று அரச அதிபராக கடமை புரிகிறான். இப்போ இவனை ஒதுக்கிய சமூகத்தின் விடி வெள்ளியாகத் திகழ்தான் அவனை வெறுத்தவர்கள் இன்று அவனை அணுகுகிறார்கள். எல்லாம் இறைவன் நியதியே.

அன்று கவலையால் தற்கொலை கூட செய்ய தயாரனவன் இன்று ஒரு அரச அதிபராக இருந்து அவனுடைய பழைய கனவுகளை நனவாக்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

அவனின் கல்லூரிப் பருவத்தில் அவன் நினைத்தது, காதல் புரிந்தது ஒருவளைத்தான். ஆனால் தூற்றுவார் பலவாறும் தூற்றினர். ஒரேயொருவளைத்தான். அவளும் உயர்தரம் கல்வி கற்றவள் தான். அவளின் சில பண்பினால் கவரப்பட்டவன்தான் இந்த அரச அதிபர் சப்ரி. ஆனால் இவளின் பல பண்பினால் இவளை வெறுத்தவனும் சப்ரி தான்.

அவள் பெயர் நதிரு. சாணக்கியமான அறிவை உடையவளானாலும் சப்ரி அக்காலத்தில் கவலையில் திகழ்வதற்கு காரண காரிய ரீதியில் இவளுக்கும் பங்குதான்.

சப்ரி தனது 19 வயதுக்குட்பட்ட காலத்தில் அவளுடன் நிகழ்ந்த ஒரு சந்திப்பில் நதிரு ஒன்ன என் மனைவியா அடையாட்டி யாரையும் அடையமாட்டேன்டி என்றான் சப்ரி.

இவன் சாதாரண சவால்களையே சவால்களாக ஏற்பவன். இது அவனுக்கு இறைவன் கொடுத்த ஒரு வரப்பிரசாதமுமாகும்.

*

சப்ரியின் உடன் பிறப்புக்களாக நான்கு பெண் பிள்ளைகளும் சப்ரியும் தான். சப்ரி இன்று 27 வயதுடையவனாகத் திகழ்ந்தான். இவன் 10 வருடத்துக்குள்ளும் எப்படியெல்லாம் மாறி விட்டான்.

இப்போது இவனின் தாய்க்கு தன் மகனை மணமாளிகையில் காண ஆசைதான். ஆனால் மகன் சப்ரி எதற்கும் முடிவு கொடுக்காததாகவே இருந்தது. அவளுக்கு கவலையை உண்டு பண்ணியது. தனது உள்ளக் குமுறலை அடக்க முடியாதவளாக.....

ஒருநாள் தன் மகனை அணுகி மகன் எண்ட கண்ணுக்குள்ள என்ட ஆசையை நிறைவேத்துடா. என்றாள். சப்ரியின் தாய் செய்னம்பு.

சப்ரி சிரித்தவாயே எதுக்கம்மா இவ்வளவு அவசரம் என்று கேட்டான் ஏன்டா இனியும் இருந்து என்னடா செய்யப்போறாய் என்று விறு விறுப்பினாள் செய்னம்பு

எதுக்கும் கவலைப் படாதங்கம்மா கெதில முடிவு சொல்றேன். என்றவன் 52042 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தான் முன் காதலித்த மிஸ் நதிரு

ஐந்து வருடத்திற்கு முன் பிறந்த மண்ணை விட்டும் சென்று வெளியூரில் வாழ்ந்தவளைப் பற்றி சப்ரி இன்றுவரை எதுவும் வினவவில்லை. இன்றுதான்....

மிஸ் நதிரு இருக்காங்களா... என்றான். எஸ் வன்மினிட். என்று மறுமுனையில் இருந்து ஒலித்தது. ஒரு குரல் சற்று விநாடிகளின் பின் நதிரு போனை எடுத்தாள்

உறலோ..... யார் பேசிறீங்க என்றாள்

நான்தான் சப்ரி பேசுகிறேன் என்றான். உற மிஸ்டர் சப்ரி மிச்ச நாளக்கி அப்புறம் பேசிறீங்க வட் ஹெறப்பன்ட் என்றாள்.

சப்ரி தன்னை சுதாகரித்துக் கொண்டு நம்ம ரெண்டு பேரும் மணமாளிகை காண்கிறது எப்போ என்றான்.

அவள் முன்பே எதிர்பார்த்த கேள்வியினால் தடுமாறாமல் கூறினாள்

5 வருடங்களாக ஒருவருக்கொருவர் முகம் காணாமல் தொலைவில் இருந்ததால் திகைத்துப் போய் விட்டாளோ என்னவோ.....

மிஸ்டர் சப்ரி என்ன மன்னிக்கணும் நாம கல்லூரிப் பருவத்தில் காதலிச்சது உண்மைதான். ஆனா இன்று நான் ஒரு பிள்ளைக்குத் தாயாயிட்டன் என்றதும் சப்ரி அதிர்ந்தே போய் விட்டான். அவனை அறியாமலேயே அவனின் கையில் இருந்த ரிஸீவர் கீழே விழுந்தது. அவனுக்கு உலகமே சுற்றியது. சோகத்தில் தலையை உடைக்காமல் மனம் அழுதாலும் மற்றவர்கள் அதனைக் காணக் கூடாது என்பதற்காக திடமான கட்டுக் கோப்புடன் இருந்தான்.

அன்று மாலை வரை அவனுக்கு காதலியின் பிளவு அதிரச் செய்தாலும் அவன்கற்ற கல்வி, பதவி, பட்டம் மக்களுடன் மக்களாக பழகும் போது ஏற்படும் உணர்வுகள் போன்றன. துயரைத் துரத்தியது.

அன்று வேலை விட்டு வீடு வந்து படுத்துறங்க ஆயத்தமான போது யாரோ அவசரமான உதவிக்கு கதவு தட்டுவது கேட்டு, கதவைத் திறந்த அரச அதி

பரீ சப்ரி யார் என்று கூட பார்த்திருக்க மாட்டான். பார்த்த விழி இமை வெட்டி இருக்காது அதே வினாடிகளில் துப்பாக்கி ரவைகள் சப்ரியை இரத்தத்தில் குளிக்கச்செய்து விட்டது. அதே வினாடியில் கண்கள் லேசாய்த் திறந்து தாயின் முகத்தைப் பார்த்தன. மறுகணம் அவை தானாக மூடிக் கொண்டன.

சப்ரியின்தாய் செயினம்பின்அவலக் குரல் ஊறாலையும் தாண்டி ஒலித்தது. சப்ரி மௌத்தான செய்தி மின்னல் வேகத்தில் எங்கும் பரவியது.

இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்

ஓ சமூகமே! மக்களுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்த அரச அதிபர் சப்ரியை துப்பாக்கி நீட்டிச் சுட்ட துர்ப்பாக்கிய வாதிகள் யாரோ?

சப்ரியின் மையத்துப் போய்க் கொண்டிருந்தது. இந் நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பலதரப்பட்ட மக்கள் வந்திருந்தனர். பலதரப்பட்ட மக்களும் துயரத்தின் வடிவமாய் சென்று கொண்டிருந்தனர்.

மையத்தை அடக்கும் போது வெள்ளமாய் கூடி நின்ற சனங்களின் விழிகளில் கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அதே போல் அவர்களின் மனத் திரையிலும் சப்ரியின் செயல்கள், பணிகள் படக் காட்சியாக ஓடிக் கொண்டிருந்தது.

மனிதன் ஒரு சரித்திரமல்ல. அவன் வெள்ளத்திலே கரையக்கூடிய களி மண். ஆனால் அவனுடைய செயல்களும் பணிகளும் என்றும் சரித்திரமாய் நிலைக்கக் கூடியது என்பது உண்மையே. ஆனால் சப்ரி ஒரு சரித்திரம்தான்.

இந்நாள் சரித்திரம் மௌத்தான நாள் என்பதை மக்களின் முகமே சான்று பகர்கின்றன.

யாவும் கற்பனை.

இவர்களுக்கு என் நன்றிகள்

மன்சூர் ஏ காதர் பீ.ஏ (சிறப்பு)

மன்சூர் (எம்.பி.சி)

றமிஸ் அப்துல்லாஹ் அட்டைப்படம் வரைந்த

மற்றும் எனக்கு பக்க துணையா... ... சகோதரிகளுக்கும் நண்பர்களுக்கும்

நன்றிகள் உரித்துடையன.

பைன் பிறைவேட் லிமிட்டெட்